தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4] கி.பி.2017 சுறவம் (10-2-1987) 85 காசுகள் [இதழ் எண்: 80] [பகுதி41-42

தன்மதிப்பும் தன்மானமும் பாராமல் இனநலம் கருதித் தமிழீழப் போராளிகள் பிரபாகரனுடன் ஒன்றுபட்டு, அவர் தலைமையில் இயங்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்!

இதைத் தவிர இவ்வின அழிவைத் தடுக்க வேறு வழியில்லை!

பாவலரேறு வேண்டுகோள்!

தமிழீழக் கொடுமைகள் நாள்தோறும் மிகுந்து வருவது அளவற்ற அச்சத்தையும் துயரத்தையும் தமிழர் அனைவர்க்கும் தந்து கொண்டிருக்கும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. தமிழரிலேயே இக் கொடு நிலைகளைக் கண்டு கவலைப் படாதவர்களோ, உள்ளம் நடுங்காதவர்களோ இருப்பார்களாயின், அவர்கள் கட்டாயம் தமிழர்களாகவோ அல்லது தமிழர்களுக்குப் பிறந்தவர்களாகவோ உண்மையாக இருத்தல் முடியாது.

இன்றுள்ள தமிழினச் சூழல் தமிழினத்திற்கு என்றைக்குமே ஏற்பட்டிருக்க முடியாதது. வரலாற்றிலும் இப்படியொரு நிலை இருந்ததாக எவரும் சொல்ல இயலாது. ஒருவேளை தமிழக வரலாறே இருண்டு கிடந்த களப்பிரர் காலத்தில் இவ்வாறு இருந்திருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. ஆனால் அக் காலத்தில் ஒருவேளை அவ்வாறிருந்திருக்கலாம். பார்ப்பனியமும் மத மூடநம்பிக்கைகளும் அயலவர் ஆளுமையும் கொழுந்துவிட்டு எரிந்திருந்த நேரம் அது.

ஆனால் இன்றோ அறிவியல் முழு வளர்ச்சிபெற்று மாந்தவியல் முழு மலர்ச்சியுற்று, உரிமையியல் நன்கு கிளர்ச்சியடைந்து வளர்ந்து வரும் காலம். இன்றைக்குப் போய் ஈழத் தமிழினம் இவ்வாறு அடிபட்டுச் செத்துக் கொண்டிருக்கிறது, இங்கிருக்கும் தாய்த் தமிழர்களாகிய நாமெல்லாரும் ஏமாளிகளாகவும் இளித்தவாயர்களாகவும் வெறுங்கையர்களாகவும் ஏதும் செய்ய இயலாதவர்களாகவும் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்றால், இதை விட இழிவு இந்த இனத்திற்கு வேறு என்ன உண்டு? இதை விடக் கொடுமை வேறு எங்கு உண்டு?

எனவே, இந்த நிலையில் இனிநாம் செய்ய வேண்டிய முயற்சி, கடைப்பிடிக்க வேண்டிய உத்தி ஒன்றே ஒன்றுதான் உண்டு. அஃது நமக்குள் நாம் ஒன்றுபடுவதே! இந்தியைத் திணிக்கவும், வடநாட்டுப் பார்ப்பனிய வணிக ஆட்சியை நிலைப்படுத்தவும், நடுவணரசு எந்த ஒருமைப்பாடு, ஒற்றுமை என்று பேசும் கரவான உத்தியைக் கையாளுகிறதோ, அதே ஒற்றுமை, ஒருமைப் பாட்டு உத்தியை நாம் கடைப்பிடித்துத்தான், அதை முறியடிக்க வேண்டும். இந்த வகையில் இன்னும் நாம் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பது கொஞ்சமும் சரியன்று.

நமக்குள் இருக்கின்ற அனைத்து அரசியல் பொருளியல், சாதி, மத, கட்சி, கொள்கை வேறுபாடுகள் அனைத்தையும் உடனடியாகக் களைந்து கொண்டு, நாம் ஒருருப் பெறுதல் வேண்டும். ஒரே உணர்வு பெறுதல் வேண்டும். அவ்வகையில் நம் அனைவருக்குமே நோக்கம் ஒன்றுதல் வேண்டும். இன்றைய நிலையில் தமிழின மீட்சிதான் நமக்கு அரசியலை விடவும், பொருளியலை விடவும், மற்ற இலக்கிய, கலை, பண்பாட்டியல்களை விடவும் முகாமையானதாக இருத்தல் வேண்டும்.

இனி, இதே நிலையைத்தான் தமிழீழப் போராளிகளும் மேற்கொள்ளுதல் வேண்டும். இனியும் நாம் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பது நம் அறியாமையையே அல்லது உணராமையையே காட்டுவதாகும்.

ஆகவே, நம் தமிழீழப் போராளிகள் அனைவரும், அனைத்துக் குழுக்களும், தங்களுக்குள்ள எந்த வகையான மதிப்பு,மான, உயர்வு, தாழ்வு நிலைகள் அனைத்தையும் களைந்துவிட்டுத் தங்களுக்குள்ளே எல்லா நிலைகளிலும் கையோங்கி நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிக்ள் அணியுடன் — தம்பி பிரபாகரனுடன் - ஒன்றாக இணைந்து, ஒருருவாகி, நமக்குக் கண்ணுக்குத் தெரிந்த முதற்பகையான சிங்களக் கொடியவர்களை நேருக்கு நேர் நின்று எதிர்த்துப் போராடுதல் வேண்டும்.

இல்லெனில், நம் இனம் முன்னேற்றம் மிக மிகப் பின் தங்கிப் போவது உறுதி. இனி, அம் முன்னேற்றம் என்பது கூட ஒருபுறம் கிடக்கட்டும். இனமே இல்லாமற் போகின்ற இழி நிலை ஏற்பட்டு விடாமல் கட்டிக் காப்பதும் இப்பொழுதைக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

நாம் தொடக்கத்திலிருந்தே கூறி வருகிறோம். நம் மற்றைய எந்தப் போராட்டமும்—இந்தியெதிர்ப்பு மண்டல் குழு அறிக்கை - கல்வி, பதவி, விழுக்காட்டுரிமை - போன்ற எதுவும் இப்பொழுதைக்குத் தேவையில்லாதன என்பது நம் முற்ற முடிந்த கருத்தாகும். வீட்டையே உரிமையாக்க வேண்டிய நாம் கதவுக்கும், பலகணிக்கும், திண்ணைக்கும் கோரிக்கையெழுப்பிக் கொண்டிருப்பது மக்களை யழிய விட்டு, நம்மை நிலைப்படுத்திக் கொள்ளும் ஒரு அரசியல் கரவடமே - தந்திரமே - ஆகும். எனவே தமிழ் நாட்டு விடுதலைக்காக நாமும, தமிழீழ விடுதலைக்காக அப்போராளிகள் குழுக்களும், ஒரு தலைமையின் கீழோ, அல்லது ஒரு கூட்டுத் தலைமையின் கீழோ முதன் முதலாகவும் உடனடியாகவும் ஒன்றுபட வேண்டும் என்று முன்னுணர்வுடனும், முழு அறிவுடனும் முழு அன்புடனும் வேண்டிக் கொள்கிறோம்! மற்றவனுககு அடிமையாக இருப்பதை விட நமக்குள் ஒருவாக்கு நாம் அடிமையாவது ஒன்றும் இழுக்கன்று. அதில் யாருக்கும் முதல் அடிமையாக்கிக் கொள்ள நாம் அணியம்!

இல்லை,என் உளமும்,
உணர்வும், உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும் திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4) இதழ் எண்-80 (10-2-1987) (பகுதி 1-42)

தமிழ்நாட்டுச் சுரண்டலுக்கு வழி அமைத்துவிட்டு, இந்தித் திணிப்பை மட்டும் எதிர்ப்பதால் பயனுண்டா?

பிழம்பெனக் குமிழ்விடும் உள்ள எழுச்சியினை ஒரு கையில் அழுத்திப் பிடித்துக் கொண்டே, மறு கையில் இதை எழுத வேண்டியுள்ளது.

—சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழகத்தைப் பார்த்துத்தான் அவ் வுணர்வு.

—நெல், கரும்பு, தேயிலை, ஏலம் - பிற விளை பொருள்களை வட நாட்டு முதலாளிகளுக்கும், அரசுக்கும் வாரிக் கொடுத்துவிட்டு- ஏறு பூட்டி, பயிரிட்டு, நாற்று நட்டுக் களை எடுத்து, பயிராக்கும் இவ் வேழைத் தமிழ் மக்கள் நிலை கண்டுதான் எழுந்தது அவ் வுணர்ச்சி.

—ஓர் அயிர (கி. கி.) எடை சருக்கரையை 90- காசு மேனி சோவியத்து ஒன்றியத்துக்கு விற்றுவிட்டு, 6-50 ஓர் அயிர எடை (கி. கி.) என ஆங்கு பெற்றுச் சுரண்டிக் கொண்டிருக்கும் நிலைகளைக் கண்டே இக் கொதிப்பு.

—நரிமணம் கன்னெய்ச் சுரண்டல்,
—கல்பாக்கம், நெய்வேலி, மேட்டூர், எண்ணூர் வழிகளிலான மின்சாரச் சுரண்டல்,
—நெய்வேலி நிலக்கரிச் சுரண்டல்,
—தமிழகம் முழுமையான கனிப்பொருள் சுரண்டல்,
—சிவகாசி எரிபொருள் வழிச் சுரண்டல்,
—தூத்துக்குடி முத்துச் சுரண்டல்,
—சென்னை எண்ணெய், உருவாக்கப் பொருள் சுரண்டல்,

...இப்படி எத்தனைச் சுரண்டல்கள்.
—இவை யாவும் யாருக்காக?
—தமிழக உழைக்கும் மக்களிடமிருந்தும்,
—தமிழகக் கனிவளங்களையும், விளை பொருள்களையும்
தொந்திதடவிக் கொண்டிருக்கும் வட நாட்டு அரசு, முதலாளிகள், வல்லாளுமையர்கள், தமிழ்த் தேசிய முதலாளிகள் சுரண்டிக் கொண்டிருக்க,

—தமிழன் ஏமாறிப் போய் வாரிக்கொடுத்து விட்டு கருவாடாகிக் கொண்டிருக்க வேண்டுமா?
—இதுதான் குடியரசு நாடா?
—இச் சீரழிவுகளை எல்லாம் புறத்தே தெரிந்து விடக்கூடாது என்று நடத்தும்,
—கலை, பண்பாட்டுச் சீரழிப்புகள்,
—மொழித்துறைச் சீரழிப்புகள்,
—சாதி, மத, மூடநம்பிக்கை வழிகளின் அடிமைத்தனத்திலான சீரழிப்புகள்.

—இப் பின்னணியில்,
—இவ் வகைச் சீரழிப்புகள், சுரண்டல் அனைத்தும் பல காலமாக இருந்துகொண்டே இருக்க,
—அன்றன்றைக்கான அரசியல் ஊதியம் தேடுகிற ஒப்போலை உண்ணிக் (Lumpen Politicians) கட்சிகள் நடத்தும் நாடகங்களினூடேயே, உண்மைப் புரட்சியாளர்கள் கரைந்துவிட வேண்டிய வருந்தத் தக்க சூழல்வேறு தமிழகத்தில் இருக்கிறது.

இந்தித் திணிப்பு - என்பது இன்று நேற்றன்று, என்றைக்கு இவ்வடநாட்டு ஆளும் கொடுநெறி அரசுக்குத் தமிழன் அடிமைப் பட்டுப் போனானோ அன்றையிலிருந்தே இருக்கிறது.

அதை இன்றைக்கு எடுத்துப் பேச வேண்டிய அரசியல் பின்னணியில் தி. மு. க. எடுத்துப் பேசும் பொழுது அதனோடே, அப் போராட்டத்திலேயே தமிழக விடுதலைக்காக மக்கள் உரிமைக்காகத் தளமிடும் நோக்குக் கொண்ட அனைத்து இயக்கங்களும் கரைந்துவிட வேண்டியுள்ளது.

இதன நிகழ்வு, காலவட்டத்தில் தி. மு. க. கைநெகிழ்க்கும் இப் போராட்டத்தினால், இம் முற்போக்கு இயக்கங்கள் கைநெகிழ்க்காமல் போனாலும், வலுவாகச் செய்ய முடியாமல் மக்கள் நிலையில் சோர்வையும், ஏமாற்றத்தையும் அல்லவா தருகிறது.

—இவ் வகையில் நமக்குப் படிப்பினைகள் குறைவல்லவே!
—திராவிட நாடு-திராவிடருக்கே - என்றும்,
—தமிழ் நாடு தமிழருக்கே! - என்றும்,
—அடைந்தால் தமிழ்நாடு
இல்லையேல் சுடுகாடு! - என்றும்,

(தொடர்ச்சி அடுத்த பத்தி பார்க்க)

(முதல் பத்தி தொடர்ச்சி)

—தமிழக விடுதலைக்கான காரணங்கள்
அப்படியே உள்ளன
நாங்கள்தாம் கைவிட்டு விட்டோம்-என்றும்,
—உறவுக்குக் கை கொடுப்போம்,
உரிமைக்குக் குரல் கொடுப்போம் - என்றும்,
—மாநிலத்தில் சுயாட்சி
மத்தியில் கூட்டாட்சி என்றும்,
—நேருவின் மகளே வருக,
நிலையான ஆட்சி தருக என்றும்,
—இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்-
என்றும்,
—இந்திய அரசியல் சட்டத்தின் 17-ஆம்
பகுதியைத் தீயிட்டுக் கொளுத்துவோம் -
என்றும்,
—அரசியல் சட்டத்தின் 17-ஆம் பகுதி
எழுதி வைத்த தாளைக் கொளுத்துவோம்!

—என்றும் படி நிலை இறக்க வீரப் பேச்சுகளிலேயே இன்று நாமும் இறங்கி அவர்களோடு கலந்து கொள்வோமெனில்...

உண்மையிலேயே இலக்கை - மறக்கிற நம்வழிப் போக்குகளை ஒரு நிமையம் நின்று நாம் சிந்தித்தேயாக வேண்டியிருக்கிறது.

—இன்றைய அளவிலான தமிழகச் சூழலையும், ஆளும் கொடுநெறியினரையும், அதற்குப் பக்க வலிவாகத் துணை போய்க் கொண்டிருக்கும் வட நாட்டுத் தமிழக முதலாளிகளையும் எண்ணும் சூழலில் நமக்குள் பலருக்கு மாறுபட்ட செயல்பாடுகள் இருப்பினும்,

—அனைத்துச் சிந்தனைகளுக்கும் எல்லையான தேசியத் தன்னிறைவு விடுதலைக்கான நிலையிலேயே இவ் வொப்போலை உண்ணிக் கட்சிகளின் எழுச்சிகளையும் வலுக்கட்டாயமாக நாம் இத் தமிழக மக்களுக்குப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது

அவ் வகையில் இன்றைக்குத் தி. மு. க. எடுத்து தடைமுறைப் படுத்திய போராட்டத்தைத் தொடர்ந்து இந்திய அரசியல் சட்டத்தின் 17-ஆம் பிரிவைக் கொளுத்தியதோடு நில்லாமல்,

நம் விளைச்சல்களை, நம் கனிப்பொருள்களை இவ் வடநாட்டுக் கொடுநெறி அரசிற்கு வாரிக்கொடுத்து ஏமாற்றங் கொண்டிருக்கும் நம் இழி நிலைக்கும் ஒரு முடிவு கட்டுமளவில்.

தமிழக விளை பொருள்களையும், கனிப்பொருள்களையும் வட நாடு சுரண்டிச் செல்வதற்குத் தடை செய்யும் போராட்டமாக வளர்த்தெடுப்போமாக.

—அதை விடுத்து,
'தமிழகத்தைச் சுரண்ட வழியமைப்போம்,
இந்தித் திணிப்பை எதிர்ப்போம்!
—என இருக்கை அமுக்கிப் புரட்சியாளர்'களாக இருப்பது, நம் கையாலாகத்தனத்தையே விளக்கும்.

நாம் தமிழர்! நம் நாடு தமிழ்நாடு! என்றைக்கும் நாம் விளைவித்த பொருள் நமக்காகட்டும், நாம் விளைவித்த பொருளைச் சுரண்ட விடடு விட்டு நாம் அடிமைப்பட மாட்டோம் என்றும் எழுச்சி கொள்வோம்!

வடநாடு செல்லும் அனைத்துப் பொருள்களையும் செல்ல விடாமல் போராட்டம் நடத்துவோம்!
வெல்க தமிழக மக்கள் இனமானப் போர்!

—விடுதலை வேட்பன்.

முன்னிதழ்த் தொடர்ச்சி

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு செய்திச் சுருக்கம்!

(நம் சிறப்புச் செய்தியாளர் : அசென்.)

28-12-86 ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணியளவில் இரண்டாம் நாள் கருத்தரங்கு தொடங்கியது. முற்பகல் அமர்வு பொதுமக்கள் தங்கள் கருத்துகளைச் சுருக்க விளக்கமாக எடுத்துரைத்திட வாய்ப்பளிக்கும் புதுமுறைப் பொதுநிலை அரங்காக அமைந்தது. மேடையில் வந்து எவ் வேறுபாடுமின்றி எக் கட்சியினராயினும், எச் சாதியினராயினும், எச் சமயத்தவராயினும் தங்கள் கருத்துகளைக் கூறலாம் என முன்னறிவிப்புத் தரப்பெற்றது. இந்நடைமுறை வேறு எந்த இயக்கமும் மேற்கொள்ளாதது.

இவ் வமர்விற்குச் 'சுதந்திரத் தமிழர் கட்சி என்ற அமைப்பின் தலைவர் மருத்துவர் செல்வம் தலைமையேற்றார். திருவாட்டி தேன்மொழி அருளி தமிழ்த்தாய் வாழ்த்தினை மிடற்றிசையாய்ப் படைத்தார். தென்மொழி ப. முருகவேள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைவர் தம் முன்னுரையினை இளைஞர்கள் தாங்கள் கொண்டுள்ள கருத்துகளைப் பல்லாற்றானும் ஆய்ந்து சரியான வழியில் வலுப்படுத்திக் கொண்டு அதன் அடிப்படையில் ஒரு தீர்மானம் ஏற்படுத்திக் போராட எழுந்து வர வேண்டும் என்னும் கருத்துப்பட மொழிந்தார்.

தொடர்ந்து ஆர்வத்துடனும் உணர்வெழுச்சியுடனும் பலரும் தத்தம் கருத்துகளை எடுத்துரைக்க முன்வந்தனர்.

நெல்லைப் பெரியவர் புலவர் திரு. சிவசங்கு தம் கருத்து தனித்தமிழ் நாடே என்பதை ஒரு பாடல் வழி இசைத்துக் காட்டினார் தாழையூத்து திரு. அதியமான் தமிழ் நாடு பிரிவதைத் தவிர வேறு வழியில்லை எனவும்; மேலாளியாறு திரு. இளஞ்சேரல் முதுபாண்டியன், தமிழன் தன் வாழ்வியல் உரிமைகளைத் தனித் தமிழ் நாட்டில்தான் பெற இயலும் எனவும்; தென்னிந்திய நல உரிமைச் சங்கம் சார்ந்த திரு. அருட்கையன் தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டு பேசும் மொழியால் தெலுங்கர், கன்னடர் எனினும் அவர்களும் தாம் தமிழினமே என்ற அழுத்த உணர்வினராய் இருத்தல் வேண்டும் எனவும் சுட்டிப் பேசினார்.

சென்னை திரு. குரு. இதயமணி பேசுகையில் நடுவணரசுக்குப் பாதுகாப்பாக இருப்பவர்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்களே என்றும், அவர்களுக்குப் பின் தமிழகமே கொதித்தெழும் என்றும் கூறினார் மேலும் மொழியடிப்படையில் தான் ஒரு நாடு அமையுமென்பதற்குப் பல சான்றுகள் உள்ளதாய்க் கூறி, எடுத்துக்காட்டாக இசுலாமிய நெறி அடிப்படையில் இருந்த பாக்கித்தானம், உருது, வங்க மொழிகளடிப்படையில் பிளவுற்றமையினைச் சுட்டிக் காட்டினார்.

சோளிங்கபுரம் திரு. நக்கீரன் திராவிட இயக்கங்களைத் தங்களுக்குள் மோதவிட்டே அழிக்கும் நிலையைச் சுட்டிக் காட்டிப் பேசினார்.

மயிலாப்பூர் இறை. பொற்கொடி தமிழின மகளிர் திரைப்படக் கவர்ச்சியில் அழுந்தியும், சமயத் தொடர்பான மூடச் சடங்குகளில் ஈடுபட்டும் போலித் துறவிகளை நம்பி ஏமாறியும் வாழ்வு நிலைகளில் தாழ்வாக இருப்பதை எடுத்துக்காட்டி, மகளிரும் போராட முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

குரோம்பேட்டை திரு. குணத்தொகையன் ஆரிய மாயையும் திராவிட மாயையும் போல் பலப்பல மாயைகள் தமிழினத்தை மாய்த்து வருகின்றன என்றும், போராட முன்வரும் உணர்வுகளைத் தாண்டிவிட்டு அதன் வழி செல்வம் திரட்டுபவர் கலைஞர் என்றும் காட்டிப் பேசினார்.

திரு புஞ்சை கோதண்டன் தனிநாடு பெற்றிடச் சரியான வழிவகைகளைக் கூறி இளைஞர்களைக் கூட்டி, இந்தியத் தேசியக் கொடியை அறுத்தெறிந்துவிட்டுத் தமிழ்க் கொடி ஏற்ற வேண்டும் என்று உணர்வுப் பொழிவாற்றினார்.

திரு. கல்லை. அருட்செல்வன், கொடுங்கோன்மையாளர்களின் குருதியைப் பாய்ச்சும்போது மட்டுமே விடுதலை மரம் வளர்கிறது என பெர்ட்ரண்டுபாரேர் என்ற அறிஞர் பேசியதை எடுத்துரைத்து விடுதலை மரத்தின் வித்தினை ஊன்ற முற்படுவதே இக் கருத்தரங்கென்றார்.

திரு. வே. கோ. வெற்றிச்செல்வன் பல்வேறு குழுவினராக விடுதலைக்கருத்தினர் இருக்கிறபோதும் அவர்கள் ஒற்றுமை உணர்வினராயிருந்து தம் தீர்மான முடிவை அடைதல் வேண்டுமென்றார்.

வேலூர் குமர. தன்னொளியன், 'சுட்டுக் கொண்டுதான் இருப்பார்கள்; செத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும்; ஆட்சி புரிந்து கொண்டுதான் இருப்பேன்' எனக் கூறிக் கொண்டு, இரும்புக் கூண்டுக்குள் இருந்து கொடியேற்றும் நிலையிலுள்ள ஆட்சியாளரின் புன்மையினைச் சாடினார்.

தென்மொழி. நா. இளமாறன் உரையில், இத் தமிழகத்தில் செயல்படுத்தப் பட்டு வரும் தொழில் வளர்ச்சிப் பணிகளைக் கூட வடநாட்டு ஒப்பந்தக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டு, மேற்பார்வைப் பணியாளர்களாக வடநாட்டாரையே அமர்த்திக் கொண்டு, மிகக் குறைந்த கூலி பெறும் வேலைகளுக்கே தமிழர்களை அமர்த்திக் கொள்ளும் கொடுமைகளை எடுத்துக் காட்டினார்.

(தொடரும்)

தமிழகத்தைச் சுரண்ட இடங்கொடுப்பதா?

பிலிப்பைன்சு அரசியல் சூழலும் மக்களின் உரிமை மீட்புப் போராட்டமும்!

-வியனரசு.

முதற் குறிப்பு: கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பிலிப்பைன்சு நாட்டில் கொடுநெறியாட்சி புரிந்து வந்த அமெரிக்க வல்லரசின் கைப்பாவையாக இயங்கி, நாட்டில் மிகுந்த பொருளியல் நெருக்கடிகளை ஏற்படுத்தியும், மக்களின் வாழ்வியல் சிக்கல்களை வளர்த்தும், அடிப்படை உரிமைகளைப் பறித்தும், தன் ஆடம்பர வாழ்க்கைக்காக மக்களைக் கசக்கிப் பிழிந்து காட்டாட்சி நடத்திய கொடுங்கோல் தன்னதிகாரி மார்க்கோசு ஆட்சியைக் கவிழ்த்து, மக்களாட்சி மலரச் செய்த பிலிப்பைன்சு மக்களின் குடியாட்சி மீட்புப் போராட்டம் பற்றியும், அதன் இறுதி வெற்றி பற்றியும் எழுதப் பெற்றது இக் கட்டுரை.

பிலிப்பைன்சு நிலவியல் அமைப்பு: செஞ்சீனத்திற்குத் தெற்கே நீலவண்ணக் கடலால் சூழப் பெற்று, சிறும், பெரும் தீவுகளாக ஏறத்தாழ 7,100 தீவுகளைக் கொண்டு 73 மாநிலங்களாகப் பிரிக்கப் பெற்று $5\frac{1}{2}$ கோடி மக்கள் தொகையைக் கொண்ட நாடு பிலிப்பைன்சு. எல்லைகளாக, கடலுக்கு அப்பால் வடக்கே சீனாவையும், மேற்கே வியட்நாமையும், தெற்கே இந்தோனேசியாவையும், கிழக்கே பசிபிக் பெருங்கடலையும் கொண்டுள்ளது பிலிப்பைன்சு நாடு.

ஆளுமை வரலாற்றுக் குறிப்புகள்: இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் பிலிப்பைன்சு இசுபெயின் வல்லரசின் ஆளுமையின் கீழ் சுரண்டல் நாடாகவும், அதன் இயற்கை வளங்களை இசுபெயின் நாட்டவர் கொள்ளையிட்டுப் போகும் வேட்டைக் காடாகவும் இருந்து வந்தது. பின்னர் அமெரிக்க முற்றுளுமை நாட்டுக்கும் இசுபெயின் வல்லரசுக்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கமான உறவின் பயனாக இரு வல்லரசுகளும் இணைந்து பிலிப்பைன்சு நாட்டை ஆளுமை செய்து அந்நாட்டு மக்களின் உழைப்பைப் பெருமளவில் சுரண்டிக் கொண்டதோடல்லாமல், அமெரிக்க வல்லரசு வியட்நாம் நாட்டில் தன் ஆளுமைத்திறனையும், படைகளையும் நிலைநிறுத்த இயலா நிலையில், அவற்றைப் பிலிப்பைன்சு நாட்டில் நிறுத்தத் திட்டமிட்டுத் தன் படைத்தளங்களை அங்கு அமைத்துக் கொண்டது.

•

இரண்டாம் உலகப் போரின் போது, கொடுநெறி சப்பானியரால் பிலிப்பைன்சு சுற்றி வளைக்கப்பட்டுக் கையகப்படுத்தலுக்குள்ளாகியது. முன்னரே அமெரிக்கப் படைத்தளங்கள் இருந்ததால் அமெரிக்கப் படைக்கும், சப்பானியருக்கும் இடையில் ஏற்பட்ட கடும்போரில் ஒன்றுமறியா பிலிப்பைன்சு மக்கள் மாண்டு போனது எண்ணிலடங்காது. இக்கொடுமைகளை எதிர்த்து பிலிப்பைன்சு தேசிய விடுதலைக் கரந்துறைப் படையுடன் (கொரில்லாப்படை), மக்கள் இணைந்து நடத்திய கடும் போராட்டத்தின் விளைவாக 1946-ஆம் ஆண்டு, சூலைத் திங்கள் 4-ஆம் நாள் **பிலிப்பைன்சு விடுதலை பெற்றது.** பொரளவில் மட்டும் பிலிப்பைன்சு விடுதலையை அமெரிக்கா ஏற்றுக் கொண்டதே அல்லாமல், தன் சுரண்டலை நிறுத்திக் கொள்ளவில்லை.

அமெரிக்கக் கைப்பாவைகளின் பொம்மையரசுகள்: இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தபிறகு உலகில் ஏற்பட்ட பெரும் அரசியல் மாற்றத்தின் விளைவாகப் போலியாகக் கொடுக்கப் பெற்ற பிலிப்பைன்சு விடுதலையை அடுத்து அமெரிக்க அடிவருடியான **மக்சேசேயின்** பிலிப்பைன்சு நாட்டின் குடியரசுத் தலைவர் பொறுப்பேற்று அமெரிக்க, பிலிப்பைன்சுடனான ஒத்துழைப்பு என்ற பெயரில் அமெரிக்கப் படைத்தளங்களை மீண்டும் நிறுவ இடம் கொடுத்து அமெரிக்காவிற்குப் பலவழிகளில் துணை நின்றார். **தரைப்படை, வான்படை, கடற்படை** என இருபதிற்கும் மேற்பட்ட படைத்தளங்களை அமெரிக்கா நிறுவி, 9000 அமெரிக்கப் படைவீரர்களை நிலையாக அங்கு நிறுத்தி வைப்பது. 1951 ஆம் ஆண்டு பிலிப்பைன்சின் தலைநகர் மணிலாவில் அமெரிக்காவிற்கும், பிலிப்பைன்சுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில், பிலிப்பைன்சுக்கு பிற நாடுகளினால் இடர் ஏற்படுமானால், அந்த உள்நாட்டுச் சிக்கலில் அமெரிக்கா தலையிடலாம் எனக் கைபொப்பமாகியது. இதன் பயனாகத்தான் 1964-66 ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா வியட்நாமைக் கையகப்படுத்திப் பல்லாயிரக் கணக்கான வியட்நாம் மக்களைக் கொன்று குவித்துத் தன் ஆளுமையை அங்கு நிலை நிறுத்த முயற்சி செய்தது. பின்னர் தோல்வி கண்டது.

பெர்டினண்ட் மார்க்கோசு, திருவாட்டி இமெல்டா இணையர்களின் தன்னதிகார ஆட்சி: ***பெர்டினண்ட் மார்க்கோசு 1966-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்று*** ஆளுமைக்கு வந்தார். இவரும் அமெரிக்காவின் அடிவருடியே. இவருடைய ஆட்சியில் முன் இருந்ததைக் காட்டிலும் மிகக் கூடுதலாக அமெரிக்கத் தலையீடுகள் இருந்தன. நாட்டின் 80 விழுக்காடு பொருளியல் அமெரிக்கக் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. முகாமையான எரிபொருள் கன்னெய் (பெட்ரோல்) வணிகத்தில் 90 விழுக்காடும் 160 அமெரிக்க நகர வைப்பகங்களும் அமெரிக்காவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இவையன்றிப் பெரும்பான்மைப் பொருளியல் அமைப்புகள் அமெரிக்கக் கட்டுப்பாட்டில் இயங்கி உள்நாட்டு மக்களின் உழைப்பை உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன. இவையனைத்திற்கும் மார்க்கோசு இடமளித்துத் தன் ஆடம்பர வாழ்வுக்கு மட்டும் தன் மனைவி திருவாட்டி இமெல்டாவின் விருப்பத்திற்குட்பட்டு வளப்படுத்திக் கொண்டு நாட்டு மக்களைப் பெருந்தொல்லைகளுக்குட்படுத்திப் பேயாட்சி நடத்தினார்.

மக்களுக்கு ஏற்பட்ட பெருந்தொல்லைகளும், அதன் விளைவுகளும்: அமெரிக்க அடிவருடியான மார்க்கோசுவும், அவரது மனைவியும் மக்களின் வாழ்வியல் அடிப்படைத் தேவைகளை எண்ணி அதற்கான திட்டங்களை வகுக்காமல், மக்களுக்காகப் போராடும் எழுச்சியாளர்களை எப்படி ஒடுக்குவது என்பதிலே கூடுதல் அக்கறை காட்டிப் படைத்துறை வலுவையும், காவல்துறை வலுவையும் அதிகாரத்தையும் கூட்டி மக்கள் உரிமைக்கெனப் போராடும் இளைஞர்களைக் கொன்றும், அடக்கியும், ஒடுக்கியும் தம் தன்னதிகார நிலையைக் காப்பாற்றி வந்தனர். எனினும் போராடும் மக்களும், எழுச்சியாளர்களும் நின்றுவிடவில்லை. அரசின் கொடுமைகள் கூடுதலாக ஆக மக்களும் பெருமளவில் கிளர்ந்தெழுந்து போராடி வந்தனர். பெருமளவில் இளைஞர்கள் கருவியேந்தி மறவழியில் கரந்துறைபோர் (கொரில்லாப்போர்) நடத்தி வந்தார்கள். இவர்களின் கடுந்தாக்குதல்களுக்குள்ளான அரசு நிலைகுலைந்து மேன்மேலும் அமெரிக்கக் கருத்தறிவுபாளர்களை அழைத்துப், படைத்துறையை வலுப்படுத்திக் கொண்டு மக்களை ஒடுக்குவதில் அரசு வருவாயில் பெரும்பங்கைச் செலவிட்டது. இதன் விளைவாகப் பொருளியல் வீழ்ச்சி, வேலையில்லாத் திண்டாட்டம், பொருள் உருவாக்க முடக்கம், பசி, பஞ்சம் இவற்றால் மக்கள் அல்லலுற்றுக், கடுமையான வாழ்வியல் நெருக்கடிகளுக்குட்பட்டு, அதிகாரிகளால் கடன் மீட்பு வரித் தண்டல் போன்ற கடுமையான தாக்குதல்களுக்குட்பட்டுத் தங்கள் வாழ்வியல் உரிமைகள் பறிக்கப்பட்டும், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்கக் குடில் இன்றிப் பெருமளவில் மக்கள் நாளுக்கு நாள் நலிந்தும், மெலிந்தும், ஒவ்வொரு நாளும் வாழ்க்கை நடத்துவதே ஒரு போராட்டமாகி வந்தது. இந்நிலைகளை எதிர்த்து மக்கள் உரிமைகளை மீட்பதற்குப் போராடிய 116 அரசியல் தலைவர்களைக் கொடுநெறியில் கொன்றும், 70 ஆயிரம் பேரைச் சிறையிலடைத்தும், கொடுமைப்படுத்தியும், புரட்சி செய்யும் எழுச்சியாளர்களை மிகக் கடுமையான முறையில் துன்புறுத்தியும் வந்தது மார்க்கோசு அரசு. இதன் உச்சக்கட்டந்தான் பிலிப்பைன்சு **எதிர்க்கட்சித் தலைவர்** கொரொசன் நீண்ட நாள் அமெரிக்காவில் தங்கிவிட்டு 1983-ஆகசுட் 21-ஆம் நாள் தாயகம் திரும்பிய போது மணிலா வானூர்தி நிலையத்தில் இறங்கிய உடன் மார்க்கோசுவின் உறவினரான படைத்தளபதி வெர் என்பவரால் திட்டமிட்ட முறையில் சுட்டுக் கொல்லப்பட்டதாகும். இவ்வாறு மக்களின் வெறுப்பையும் உலக நாடுகளின் எதிர்ப்பையும், மக்களின் உரிமை மீட்புத் தலைவர்கள் கண்டனத்தையும் பெற்றார் கொடுநெறி மார்க்கோசு.

கொரொசன் படுகொலையும், மக்கள் எழுச்சியும்: எதிர்க்கட்சித் தலைவர் கொரொசன் மணிலா வானூர்தி நிலையத்தில் பட்டப் பகலில் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியை அடுத்து மக்கள் எழுச்சி கொண்டு பெரும் போராட்டத்தைத் தொடங்கி நடத்தினர். மக்களின் பேரெழுச்சியைக் கண்ட மார்க்கோசு பெயருக்கு உசாவல் குழு (விசாரணைக் குழு) ஏற்படுத்தி, ஓராண்டுக்கு முன் தளைசெய்யப்பட்டுச் சிறையில் இருந்த, குற்றவாளிகள் எனக் கருதப்பட்டவர்களை விடுதலை செய்தார். இதைச் சான்றுகாட்டித் தம்மை ஓர் உண்மையான குடியரசுத் தலைவர் என உலகுக்கு எடுத்துக்காட்டி, 1986 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7-ஆம் பக்கல் குடியரசுத் தலைவர் தேர்தல் நடத்தப்படும் என்றறிவித்தார். தேர்தலில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என முடிவு செய்து, சுட்டுக்கொல்லப்பட்ட **கொரொசனின்** மனைவி **அகினோவை** தேர்ந்தெடுத்து நிறுத்தினர்.

அகினோவின் அரசியல் நுழைவும், மக்கள் எழுச்சியும்: எதிர்க்கட்சித் தலைவர் கொரொசனின் அரசியலில் மிகுந்த ஈடுபாடு உடையவராக திருவாட்டி அகினோவும் விளங்கினார். மார்க்கோசுவின் தன்னதிகார ஆட்சிக்கு எதிராகப் பெரும் மக்கள் கிளர்ச்சிகளைச் செய்து பலமுறை தளைப்படுத்தப்பட்டுச் சிறைசென்று துன்பங்களை ஏற்றிருக்கிறார். இவர் அமெரிக்க வல்லரசின் எதிர்ப்பாளரும் கூட. எனவே இவரை மக்கள் பெருமளவில் ஆதரித்து, இவர் நடத்தும் குடியாட்சி உரிமைமீட்புப் போராட்டத்தில் பங்கு கொண்டனர்

(தொடரும்)

தொடர்-3

கருத்தரங்கை வரவேற்று வாழ்த்துரைத்த நெஞ்சங்கள்!

11. எழுச்சி தந்நல வேட்கைக்குப் பலியாகி உள்ளது!

பேரன்புடையீர், ஆன்ம நலம் விழைக. தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு அழைப்பிதழ் வரப்பெற்றேன். அன்பிற்கு நன்றி!

ஆளுமைப் பணி, அழுத்தம் காரணமாகக் கருத்தரங்கில் கலந்து கொள்ள இயலவில்லை. பொறுத்தருள்க.

கருத்தரங்கு நல்ல முடிவுகளை — தற்கால உண்மை நிலை அடிப்படையை மனத்தில் கொண்டு- எடுக்கும் என நம்புகிறேன். சுற்றுப்புறச் சூழல் பெருத்த அவநம்பிக்கையைத் தோற்றுவிக்கிறது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை- என்பது போலத் தமிழர் தனித்தன்மை எழுச்சி பல நேரங்களில் தந்நல வேட்கைக்குப் பலியாகி விட்டிருக்கிறது. மீண்டும் அப்படி ஒரு நிலை எழாது என்பதை யார் உறுதி செய்வர்? காலம்தானா? எப்படியோ கருத்தரங்கு முடிவுகளையும் அதனைச் செயல்படுத்தும் நெறிமைகளையும் அறிய ஆவலாக உள்ளேன்!

அன்புடன், —சிவ. ஆதிநாதன்,
குந்தாகுந்த நகர் வ. ஆ.

22. கூட்டுக் குடியரசு முறையே வேண்டும்!

அன்பிற்கினிய உ. த. மு. க. முதல்வர் அவர்கட்குப் பணிவார்ந்த வணக்கம். தாங்கள் அனுப்பிய 'தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்க' அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன், மகிழ்ச்சி; நன்றி!

எனக்குள்ள பல்வேறு நெருக்கடியான சூழல்கள் காரணமாக இப்பொழுதைக்குக் கருத்தரங்குகளில் கலந்து கொள்ள இயலாநிலை. ஆயினும் எனக்குரிய கருத்தை- தீர்மானிப்பை- அறிவிக்கிறேன்.

சோவியத்து ஒன்றியத்தில் இருப்பது போன்ற கூட்டுக் குடியரசு முறையே இன்றைக்கு நம் நாட்டிற்குக் குறிப்பாகத் தமிழகத்திற்கு வேண்டும். அந்த அடிப்படையில் 'தமிழநாட்டரசுக்கு மிகு அதிகாரங்களை உடைய மாநிலத் தன்னாட்சி முறையே" இன்றைய நிலையில் தமிழினம் முன்னேறுவதற்குரிய சரியான வழிமுறை என்று நான் தீர்மானிக்கிறேன். தங்கள் மாநாடு சிறக்க என் வாழ்த்துகள்! தோழமையுடன்

—கா. விலலவன் புதுச்சேரி—9

23. பிரிவினையில் நாட்டமில்லாதவர் போல் நடித்தே ஆக வேண்டும்!

அன்புடையீர், வணக்கம். தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கில் பங்கு பெறும்படி எனக்கு அழைப்பு கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி. நிகழ்ச்சி நாள்களில் காரைக்காலில் நடக்க இருக்கும் நிகழ்ச்சியில் பங்குபெறுவதாக உறுதி அளித்துவிட்டமையால் இம் மிக இன்றியமையாத நிகழ்ச்சியில் பங்கு பெற இயலாமைக்கு வருந்துகிறேன். ஒப்போலைக் கணிப்பின் முடிவு இந்திய வல்லாண்மை அரசு தமிழ் நாட்டினரை ஐயக்கண் கொண்டு நோக்கும்படி செய்துவிடக் கூடாது. ஈழநாடு எனும் ஒரு கல் எடுக்கும் நிகழ்ச்சி (கோட்டைச் சுவர் உடைக்க ஒரு கல்லை முதலில் எடுத்தல் போல்) வெற்றியாக முடிக்கத் தாய்நாட்டுத் தமிழர் பிரிவினையில் நாட்டமில்லாதவர் போல் நடித்தே ஆக வேண்டும். இதில் மிகக் கவனமாக இருக்க வேண்டுகிறேன். கணிப்பு முடிவு அறிவிப்பில் இருக்க வேண்டுகிறேன். இவண்.

—பவானி மதுரகவி, புதுச்சேரி.

24. கனிந்த வாழ்த்துகள்!

அன்புநலஞ்சான்றீர்! வணக்கம். கருத்தரங்கு அழைப்புப் பெற்றேன். குறித்த நாளில் வரமுடியாமைக்கு வருந்துகிறேன். கருத்தரங்கு வெற்றி பெற என் கனிந்த வாழ்த்துகள். நன்றி. ஐ. உலகநாதன்
பெங்களூர்.

25. பாராட்டுதலும் நன்றியும்!

அய்யா, மாநாட்டு அறிக்கை பார்த்தேன். மகிழ்ச்சி, தாங்கள் எடுக்கும் நம்முடைய தமிழர்கள் முன்னேற்றச் செயல் நடவடிக்கையைப் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அன்பன்,

இர. வையத்தரசு, சென்னை-32

26. மாநிலத் தன்னாட்சிக்குத்தான் பாடுபட வேண்டும்!

அன்புடையீர், வணக்கம். கருத்தரங்கு மாநாட்டு அழைப்பு கிடைக்கப் பெற்றேன். நன்றி. தமிழர்கட்கு ஓர் ஒளி மிகு காலம் வர வேண்டுமெனில் கோயில்களில் தமிழர்கள் வழிபாடு செய்பவர்களாக ஆகும் காலம் வரவேண்டும் என்பது எனது முடிவான கருத்து. அவர்கள் வழிபாடு செய்வதற்காகப் போராடினால் நல்லது... தமிழர்கள் வழிபாடு செய்

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

இன உரிமையே மக்களின் முதல் உரிமை!

விடுதலைப் போருக்கு நாள் குறித்து விட்டாயா?

(பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு)

ஒப்போலை அளித்துனது முடிவை நீயும்
உணர்வெழுந்து கூறிவிட்டாய் தமிழா! வெல்க!
எப்போது களம்அமைக்கப் போகின்றாய்நீ,
இழந்திட்ட உரிமையினை மீட்ப தற்கே?
முப்புறமும் உனைப்பகைவர் சூழ்ந்து விட்டார்!
முழக்கியுன துரிமையினைக் களத்தில் வென்று
கப்பியதாம் இருளுமின்று தமிழ கத்தில்
கதிரொளியாம் விடிவெள்ளி தோன்றலென்றோ?

நாள்குறித்து விட்டாயா தமிழ கத்தை
நயவஞ்ச நரிகளிட மிருந்து மீட்க?
தேள், பாம்பை யொத்தபகை நடுவி னில்நீ
சிக்கியின்று மாய்கின்றாய்! சிலிர்த்தெ ழுந்து
தோள்தட்டி நீயார்த்து மீட்ப தென்றோ;
சொல்.தமிழ நாட்டினையே? விடுத லைத்தீ
வேள்வியிலே பகைவனது குருதி பெய்து
வென்று தமிழ் வீரத்தை நாட்ட லென்றோ?

போச்செல்லாம் போச்சந்தோ! இனிமே லும் நீ
பொறுமைபூண் டிருப்பதுவோ? பொங்கி யார்ப்பாய்!
ஓச்சினை நீ கோலன்று! பரந்த இந்த
உலகத்தை ஓர்குடைக்கீழ் ஆண்டு யர்ந்தார்!
பேச்சிழந்து பீடிழந்து தாழ்ந்தாய் இன்று
பேராற்றல் தனைச்செயலில் காட்டி வென்று
மூச்சான விடுதலைக்குக் களம்அ மைத்து
மொழி,இனத்தை, நாட்டை,விடு விப்ப தென்றோ?

வாய்ச் சொல்லில் வீரனென வாழ்ந்தி டாமல்
வாளெடுத்துக் களம்புகுந்து பகைமு டிப்பாய்!
மேய்கின்றார் தமிழ்நாட்டை வடபு லத்தார்!
மிகச்சுரண்டிக் கொழுக்கின்றார்! பார்த்தி ருந்தால்
பேய்ச்சேர்வாய் புதைகுழிக்கே! இதையு ணர்ந்து
பொங்கியெழுந் தின்றேநீ களம்பு குந்து
பாய்ந்தடிக்கும் புலியாக வீறு கொண்டு
பகைமுடித்து வென்றுதமிழ் நாட்டை மீட்பாய்.

"அண்ணா"

"என்ன தம்பி?"

"அரசு ஊழியர்களுக்கு ஓர் ஆண்டில் உள்ள 365 நாள்களில் 24? நாள்கள் தான் வேலை. ஆசிரியர்களுக்கோ 155 நாள்கள்தாம் வேலை. ஆனால் காவலர்களுக்கோ 24 மணி நேரமும் வேலை! ஆகவே அரசு ஊழியர்களைவிட, ஆசிரியர்களை விடக் காவலர்களுக்கு ஊதியம் மிகுதியாக வழங்குவது நயன்மையே!" என்று ஓர் அமைச்சர் பேசியிருக்கிறாரே!"

"ஆமாம்!"

"ஊதியக் குழுவின் பரிந்துரை வருவதற்கு முன்வரையில் இந்த மூன்று பிரிவிலிருக்கும் அடிப்படை ஊதியம் ஒன்றாகத்தானே இருந்தது?"

"ஆமாம்!"

"அப்போதெல்லாம் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும். காவலர்களைப் போல 24 மணி நேர வேலை இருந்திருக்குமோ?"

"எனக்குத் தெரியாது தம்பி!"

"எந்த ஓர் ஊழியருக்கும் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் தானே அண்ணா வேலை? அப்படியிருக்க ஒவ்வொரு காவலரும் 24 மணி நேரம் வேலை செய்வதுபோல் பேசுவது சரியா? அண்ணா"

"எனக்குத் தெரியாது தம்பி!" —தமிழவேள்.

இதழ் விற்கும் முகவர்கள், அன்பர்கள் கவனத்திற்கு!

தமிழ்நிலம், தென்மொழி தமிழ்ச்சிட்டு- ஆகிய இதழ்களை விற்பனை செய்யும் முகவர்களாலும் அன்பர்களாலும் நாம் படும் தொல்லைகளுக்கும், அடையும் இழப்புகளுக்கும் அளவில்லை. அவர்கள் பட்டியல் தொகைகளைக் குறித்த காலத்தில் அனுப்புவதில்லை. சிலர் நிறைய நிலுவை வைத்திருக்கிறார்கள். சிலர் ஏமாற்றும் நோக்கத்துடன் தொகை விடுக்காமலும் எழுதும் நினைவூட்டு மடல்களைப் பொருட்படுத்தாமலும் உள்ளார்கள். இந்த ஆண்டு இறுதிக்குள் அவர்கள் தம்தம் நிலுவைகளை எச்சமின்றி விடுத்துக் கணக்கை சரிசெய்து கொள்ள வில்லையானால், அடுத்த மாதத் தொடக்கம் முதல் கட்டாயம் இதழ்கள் விடுப்பது நிறுத்தப் பெறுவதுடன் சட்டப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்பெறும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். -அமைச்சர்.

தொட்டுக் காட்டுகிறோம்; விளங்கிக் கொள்ளுங்கள்!

1. புரட்சி முதல்வரின் புதுப்புரட்சி!

13-12-87 செய்தித்தாள்களில் அரைப் பக்க விளம்பரம்! பொங்கலைக் கொண்டாடவில்லையாம் நம் புரட்சி முதல்வர்!

ஏன்? தன் மூத்த உடன்பிறப்பு 'பெரியவர்' சக்கரபாணி மறைந்து ஓராண்டு முடியவில்லை என்பதாலாம்! காரணம் சொல்கிறார், முதல்வர்! மக்கள் நலம் கருதி உழைக்கும் மக்கள் 'திலக'மே! உன் தமிழினத் தாய்மார்கள், அவர்கள் ஈன்றெடுத்த அருமைக் கண்மணிகள் (நீ பிறப்பெடுத்த) ஈழத்து மண்ணில் அன்றாடம் குண்டுகளால் துளைக்கப்பெற்றுக் கொலையுண்டு, குருதி வெள்ளத்தில் மிதப்பது உனக்குத் தெரியாதா?

அவர்களெல்லாம் உன் தாய்க்குலமில்லையா?

அவர்களெல்லாம் உன் அரத்தத்தின் அரத்தங்களில்லையா?

அவர்களெல்லாம் மடிந்ததற்காக- மறைந்ததற்காக நீ பொங்கல் கொண்டாடாமல் இருப்பதாக அறிக்கை வரவில்லையே!

உன் உடன்பிறப்பு- சக்ரபாணி மறைந்ததற்காக மட்டுந்தானா நீ பொங்கல் கொண்டாடவில்லை என்று அறிக்கை விடுவது?

பொதுநலம் நாடும புரட்சிக் காரனே!
மக்கள் நலம் நாடும் மாதவன் பேரனே!
ஈழம் விடியும் வரை,

'பொங்கலில்லை' 'விழாக்களில்லை' 'வேடிக்கைகளில்லை' என நீ அறிக்கை விட்டிருக்கக் கூடாதா?

அப்படிச் செய்திருந்தால் தானே நீ 'பொன்மனச் செம்மல்!'

உன் பொன்மனத்துக்கு எத்தனை மாற்று என்பது இந்த "பத்தரை மாற்றுத் தமிழருக்கு" என்றுதான் புரியுமோ?

மற்றொரு செய்தி எங்களுக்கு விளங்கவில்லை! பொங்கல் கொண்டாடாத நீ அதற்கு மறுநாளே உன் பிறந்த நாளை ஆரவாரமாக நாடு முழுவதும் கொண்டாட மறைமுக ஏற்பாடுகளைச் செய்து கொண்டாயே!

அது மட்டும் என்றுமே புரியாது இந்த மர மண்டைகளுக்கு! -குத்தீட்டி.

1988-இல் செய்தித் தாள்களுக்கு இறுதிச் சடங்கு!

"தாளிகை உரிமை மெது மெதுவாக மறுக்கப் படுகிறது. 1988-ஆம் ஆண்டில் நாளும் வெளிவரும் செய்தித்தாள்கள், குறிப்பாகச் சிறிய செய்தித் தாள்களுக்கு இறுதிச் சடங்கு நடக்கும். அதில் கலந்து கொள்ள வாய்ப்பாக, தில்லியிலுள்ள பல மூத்த செய்தியாளர்கள் (குறிப்பாக மாநிலங்களிலிருந்து வெளிவரும் மாநிலச் செய்தித் தாள்களின் செய்தியாளர்கள்), செய்தித்தாள்கள் வெளிவரும் நகருக்கே குடிபோய் விட ஆயத்தமாகி வருகிறார்கள்."

—இப்படிச் சொல்பவர் ஏறத்தாழ 30 ஆண்டுகளாய்ச் செய்திகள் திரட்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் நரேந்திரன் (நாயர்) எனும் சிறப்புச் செய்தியாளர்!

இதற்கோர் எடுத்துக்காட்டு!

தில்லியிலிருந்து, பல மாநிலங்களுக்கும் தொலையச்சு (Teleprinter) வழியாகச் செய்திகளை அனுப்புவதற்கு, முன்பெல்லாம் ஒரு நாளைக்கு நான்கு மணி நேரத்துக்கு ஆண்டுக் கட்டணமாக உருபா 12 ஆயிரம் செலுத்த வேண்டும். அஃதாவது மாதத்திற்கு ஆயிரம் உருபா.

இப்பொழுது (87 சனவரி முதல்) அரசு அஞ்சல் விலையேற்றத்துடன் அத் தொலையச்சுக் கட்டணத்தையும் உயர்த்தியிருக்கிறது தில்லியரசு! எவ்வளவு தெரியுமா? 320 விழுக்காடு. அஃதாவது முன்பு நாளும் குறிப்பிட்ட நான்கு மணி நேரம் மேனி ஆண்டொன்றுக்குச் செலுத்தப்பட்ட 12 ஆயிரம் உருபா கட்டணம் இப்பொழுது ஓர் இலக்கத்து 34 ஆயிரம் உருபாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது! அஞ்சல் கட்டணம் 3 மடங்கு! தொலையச்சுக் கட்டணம் 11.17 மடங்கு!

அரசு எவ்வாறு தாளிகை உரிமைகளை நேரடியாகப் பறிக்காமல் மறைமுகமாக அதன் குரல்வளையைப் பிடித்திருக்கிறது பார்த்தீர்களா?

நடுவணரசு அறிவித்துள்ள இந்தக் கட்டண உயர்வுக்குச் செய்தித் தாள்கள் கழகமும், செய்தித் தாள் ஆசிரியர்களின் கழகமும் கடும எதிர்ப்புத் தெரிவித்தும் அதற்கு எந்த வகைப் பயனும் இல்லாமல் போய்விட்டது. அனைத்து எதிர்ப்புகளும் செவிடன் காதில் ஊதிய சங்குதான்! எனவே, தில்லியிலுள்ள பல செய்தித்தாள்கள் அலுவலகங்களை மூடிவிட அணியமாகி விட்டன.

ஜெய்ப்பூரிலிருந்து வெளியாகும் 'தேசநந்து' என்னும் இந்தி நாளிதழின் ஆசிரியர் இலலித்சுர்சன் நடுவண் அஞ்சல் துறை அமைச்சர் தம் மாநிலத்தைச் சேர்ந்தவர் (எம்.பி.) என்பதால் அவரிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டார்— 320 விழுக்காட்டு உயர்வு தவறு என்று! ஆனால் அமைச்சர் அர்சுன் சிங்கோ 'மக்கள் தொலைக்காட்சியையே அதிகமாகப் பார்ப்பார்கள்; அச்சுத் தொடர்பு (Print Media) 21-ஆம் நூற்றாண்டில் மதிப்பிழந்து விடும் என்று அதிகாரத் தோரணையுடனும் எக்களிப்புடனும் கூறினாராம்.

ஆக, இராசீவ் காந்தியின் அரசு பொது மக்கள் மிக மிக இழிவாகப் பேசும்படிதான் நடந்து கொள்கிறது. 'ஊருக்கு ஊர் தலைப்பாகையை மாற்றிக் கொள்வதால் மட்டும் உள்நாட்டு மதிப்பை (Local emage) வளர்த்துக் கொள்ள முடியுமா, என்ன? என்று கேட்கும் எதிர்க்கட்சியினர் கூடத் துணிவாக எதையும் செய்திட முன்வராதிருப்பது இராசீவ் காந்திக்கு ஊதியமே.

அச்சுத் தொடர்பு (Print Media) வேண்டாம். அச்சுத் தொடர்பு மூலம் கிடைக்காத விளம்பரம் காட்சித் தொடர்பால் (Vision Media) கிடைத்தால் போதும் என்று இராசீவ் நினைக்கிறார் போலும். மொத்தத்தில் தாளிகைகளை இழுத்து மூட இராசீவ் அரசு கருதுகிறது என்றே படுகிறது.

இந்த அடிப்படையில் இந்தியச் செய்தித்தாள் நிறுவனமும் (P. T. I.), இந்தியச் செய்தித்தாள் ஒன்றியமும் (U. N. I)? தங்களின் தொலையச்சுச் செய்தியனுப்பு முறையைச் சிறிது தவிர்த்துக் கொண்டு, தொலைக்காட்சி வழிச் செய்தியனுப்பு முறையை விரிவு செய்திருக்கின்றன. தங்கள் முழு முயற்சியையும் தொலைக்காட்சிச் செய்தி முறையில் செலுத்தத் தொடங்கி விட்டன.

செய்தித் தாள்களுக்குச் செய்தி தரும் பணிகளைப் புறக்கணித்து இரு இந்தியச் செய்தி நிறுவனங்களும் இப்படித் தொலைக்காட்சிக்கு உடலை விற்பது (சோரம் போவது) மிக மிக இழிவு!

ஆங்கிலச் செய்தி நிறுவனங்களிலிருந்து தரப்படும் செய்திகளைப் பார்த்தால் எதிர்க்கட்சிகள் எந்த அளவு புறக்கணிக்கப் பெறுகின்றன என்பது தெரியும். பாரதிய சனதா, சனதா, பொதுவுடைமைக் கட்சிகள், லோகதளம் போன்ற எதிர்க் கட்சிகளைக் கூட அவை கண்டு கொள்வதே இல்லை. குறிப்பாக, திசம்பர் 20, 21 ஆகிய இரண்டு நாள்களை மட்டுமே எடுத்துக் கொள்ளலாம். அந்த இரண்டு நாள்களில் யூ என். ஐ. தொலைக்காட்சி மூலம் வந்த செய்திகளைப் பார்த்தால் அவற்றில் மூன்றே மூன்று வரிகள் தாம் எதிராக கட்சிகளைப் பற்றி இருந்தன. போதாக் குறைக்கு, தலைநகரிலிருந்து வெளியாகும் இரண்டு புகழ்பெற்ற ஆங்கில நாளிதழ்களின் ஆசிரியர்களாகத் 'தலைமையமைச்சர்' இராசீவ் காந்தியுடன் டூன் பள்ளியில் படித்தவர்களே அமர்த்தப் பட்டுள்ளனர்.

"1975-இல் நெருக்கடி கால நிலையில் இருந்த தணிக்கை முறையை விட 1986-இல் இராசீவ் அறிமுகப் படுத்தியிருக்கும் மறைமுகக் கெடுபிடிகளே கொடுமையானவை" என்கிறார் ஏமவதி நந்தன் பகுகுணா. அவர் சொல்வதை மறுப்பதற்கில்லை.

தாளிகை உரிமை என்பது எதிர்க் கட்சிகளின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டதே! சரியான எதிர்க்கட்சியே இல்லாத நிலை இப்போது!

எனவே பல வண்ணங்களில், பல உடைகளில், பல தலைப்பாகைகளில் தோன்றும் இராசீவ் காந்தியை நாம் தொலைக்காட்சியில் அன்றாடம் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர இப்போதைக்கு நமக்கு வேறு வழியில்லை.

25-1-87 தினமணிக்கதிர்க் கட்டுரையைத் தழுவியது.

இராசீவ் செய்தியிதழ்களை ஒழிக்கப் பார்க்கிறார்!

கருத்தரங்கப் படங்கள்

பாவலரேறு தொடக்கவுரை

இனியனார் முதல்நாள் முற்பகல் தலைமையுரை

வழக்கறிஞர் இராமதாசு
முதல்நாள் பிற்பகல் தலைமையுரை

மருத்துவர் கோ.மு. செல்வம்
இரண்டாம் நாள் முற்பகல் தலைமையுரை

அரு. கோபாலன்
இரண்டாம் நாள் பிற்பகல் தலைமையுரை

மேடையில் பாவலரேறு, வழக்கறிஞர் இராமதாசு, வழக்கறிஞர் கு.ச. ஆனந்தம்


ஒப்போலை எண்ணல்:
ப. துரையரசன், பாலகங்காதரன், தேர்தல் மேலாளர்
வெற்றிச்செல்வன், தென்னவன்கோ
பாவலரேறு மேற்பார்வையிடுகிறார்

ஒப்போலை எண்ணிக்கை முடிவு அறிவித்து
பாவலரேறு முடிவுரை

(3- ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயர்ந்தால் தமிழுக்கும் ஏற்றம் உண்டாகும் குமுகச் செயல் ஒவ்வொன்றிலும் தமிழ் இடம் பெறு. பல கால ஆய்வுக்குப் பிறகு இதை முடிவு செய்தேன்... இந் நிகழ்ச்சியினால் ஆரியக் குமுகத்தின தெய்வமில்லை என்ற கொள்கையைப் பரப்பத் தொங்கி விடுவார்கள். பெரியார் கொள்கை எளிமையாய் ஆரிய இனத்தவராலேயே பரப்பப்படும்... ஒத்துத் தமிழர்கள் மாநிலத் தன்னாட்சிக்குத்தான் படுபட வேண்டும் என்பது என் கருத்து. படிப்படியாக உயர அதுதான் வழி. இல்லையேல் அழிக்க நினைப்பர் தில்லி அரசாள்வோர்.

—புலவர் அ. பழநியடிகள், வில்வாரணி. வ. ஆ.

27. ஓராண்டுக்குள் விடுதலைப்போர்!

பேரன்புடையீர், வணக்கம். பேராவலோடு கருத்தரங்கிற்கு வர அணியமாய் இருந்தேன். எதிர்பாராத குடும்பச் சிக்கலின் காரணியமாய் வர இயலவில்லை. மனம் கருத்தரங்கில்; உடல் வீட்டில். இஃது என் இப்போதைய நிலை

கருத்தரங்கம் வெற்றியோடு முடிய வேண்டும். அதில் தமிழகத்தை நடுவத்தின் விடுதலைக் கோரிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். ஓராண்டுக் காலத்திற்குள் கோரிக்கை கவனிக்கப்படவில்லையெனில் விடுதலைப் போர் தொடங்கப்படும் என்னும் முன் அறிவிப்பும் அதில் இருக்க வேண்டும். இவை எனது ஆவலும் கருத்துமாகும்.

—பாவலர் சின்னப்பனார். கொம்மக்கோவில்.

28. ஒத்துழைப்பு உண்டு.

அன்பினிய ஐயா அவர்களுக்கு. வணக்கம். உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் நடத்தும் "தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு" நிகழ்ச்சியின் அழைப்பினைப் பெற்றேன். நன்றி மகிழ்ச்சி! தங்களின் எவ்வகையான செயல்பாட்டு முயற்சிகளுக்கும் என் முழுமையான ஒத்துழைப்பு உண்டு. அன்பின்,

அறவாழி, பெங்களூர்-1

29. உதைத்துத் திருத்த ஒருபடை வேண்டும்!

அன்புடையீர், வணக்கம். நன்றி! அழைப்பிதழ் கண்டேன். கருத்தரங்குத் தலைப்பு துயரங்களை விடக் கவலைகளைத் தருகின்றது; இதுவரை எழுதப்பட்டவை, பேசப்பட்டவை எல்லாம் செயலை நோக்கிய முடிவுகளில்லையா? இன்னும் எத்தனைக் காலங்கள் கண்டனம், பொதுக்கூட்டம், கடையடைப்பு, ஊர்வலம், மாநாடு, தீர்மானங்கள், கருத்தரங்குகளையே நடத்திக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? சிறிய பூனைக்கு ஓர் ஓட்டை, பெரிய பூனைக்கு ஓர் ஓட்டையா? ஈழ விடுதலை மாநாடுகளில் உதிர்க்கப்பட்ட வீர மொழிகள், எடுக்கப்பட்ட முடிவுகள் மறந்து போனவையா? பொய்யாய்க் கனவாய் மெல்லப் பழங்கதையாகிப் போனதே?

விடுதலை என்பது வழிவழிச் சொத்துரிமைக் காணியாட்சியோ? (பாத்தியதையோ?) நமக்கு முன்னோர்கள் விடுதலை உரிமையாகத் தமிழ்நாட்டைத் தந்தார்களா? அடிமை ஒப்பந்தந்தானே? அந்த அடிமை ஒப்பந்தத்தை வாய்ப் பந்தலிட்டுக் கிழித்தெறிந்து விட்டு அடிமை விலங்குகளை முறித்துவிட முடியுமா? குருதி சிந்தாமல் உரிமைப் பட்டயம் எழுதிவிட முடியுமா?

இந்தியத் தேசிய நீரோட்டத்தில் இணைந்து போவது குறித்துக் கருத்தரங்கில் ஒப்போலைப் பதிவு தேவையா? 'ஓட்டு' - 'வேட்டு' - 'ஒட்டு'— என்பவை யெல்லாம் நடந்து முடிந்தவை. செயலுக்கு வருவோர் பட்டியலைத் தேடி அலைந்து தலைமறைவு இயக்கம் நடத்த வேண்டிய நாளில் உங்கள் செயல் பின்னோக்கிப் போகிறதே, ஏன்? எனக்குப் பாவலர் பாவிசைக்கோவின் பாடல்வரிதான் நினைவுக்கு வருகின்றது.

'உதைத்துத் திருத்த ஒரு படை வேண்டும்!'

அன்புடன் மு. குணாளன், வாணியம்பாடி.

30. நாட்டைத் தனியே பிரிக்க!

அன்பு கெழுமிய பாவலரேறு பெருமான் அவர்களே! வணக்கம நடைபெறும் மாநாடு சிறப்புற நடந்து எதிர்காலத்தில் நாட்டைத் தனியே பிரிக்க!

—வை. வீருண்டான், தாஞ்சூர்.

31 வெற்றி பெற வாழ்த்துகிறேன்!

தோழர் பெருஞ்சித்திரனார்! தங்கள் மடல் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. நான் இன்று இன்றியமையாத வேலையாக வெளி ஊருக்குச் செல்வதால், தங்கள் மாநாட்டில் கலந்துகொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். நான் ஊரிலிருந்து வந்ததும் தங்களைச் சந்திக்கிறேன்... தங்கள் மாநாடு சீரும் சிறப்புமாக வெற்றி பெறட்டுமென வாழ்த்துகிறேன். தங்கள் நட்பு மறவாத,

—எம். இப்ருகிம், வழக்கறிஞர், சென்னை-18

32, கமுக்கமாக நடைபெற்று...!

அன்பிற்கினிய ஐயா அவர்களுக்கு, வணக்கம். தவிர்க்க இயலாக் காரணியத்தால் மாநாட்டில் கலந்து கொள்ள இயலவில்லை... தென்மொழிக் கொள்கையான தமிழகம் விடுபட்டாக வேண்டும் என்பதே எம கருத்து. அதற்கான உறுதியான இறுதியான முடிவு ஆயின் கமுக்கமாக நடைபெற்று, செயற்பாடு தொடக்கப் பழுத்து கனிந்து வெடிக்க வேண்டுமேயன்றித் வளர்ந்து கனிந்து வெடிக்க வேண்டுமேயன்றித் திறந்த வெளியில் கூறிச் செயல்படாமல் சிக்கிக் கொள்ளும் வழியிலன்று என்பது எம பணிவன்பான கருத்து. அன்புடன்,

—மணிமுத்து, பழனி.

33. சோவியத்து நாட்டைப் போல்...!

அன்புடையீர், தங்கள் அழைப்பு கிடைத்தது' மாநாடு சிறப்புற விழைகிறேன்... தமிழ் நாட்டின் எதிர்காலத்திற்கு இன்றைய நிலையில் என் கருத்து:

தமிழ்நாட்டரசுக்கு (சோவியத்து நாட்டின் மொழி, இன மாநிலங்களைப் போல்) மிகு அதிகாரங்கள் உடைய மாநிலத் தன்னாட்சி பெறுவதுதான். இதை எனது ஒப்போலையாக ஏற்கலாம். அன்பன்

—த. கோவேந்தன், சென்னை-24.

34. நம் உறவு வலுப்பெற வேண்டும்!

மதிப்பிற்குரிய பாவலரேறு அவர்கட்கு, வணக்கம், தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்குக்கு வருமாறு விடுத்த அழைப்புக்கு மிக்க நன்றி. தமிழினத்தின் மீட்சிக்குத்தாங்களாற்றும் பணிகளுக்கு எம் போன்றோரின் துணை என்றுமுண்டு. குறிப்பாக, தமிழக விடுதலைதான் தமிழினத்தின் மிடிமைக்கு வழி என்னும் முடிவை அக் கருத்தரங்கு எடுக்குமாயின், நம உறவு இன்னும் செப்பமாக வலுப்பெறத்தான் வேண்டுமென்பது என்னுடைய பணிவான கருத்து.

உ. த. மு. க. கூட்டுகிற இந்த நல்ல கருத்தரங்கில் தனிப்பட்ட ஒரு காரணியத்திற்காகப் பங்கெடுக்க இயலாத நிலை எனக்கு அருள் கூர்ந்து பொறுத்தருள்க. வணக்கம். இவண்,

குணா, பெங்களூர்-42

35. தங்களைப் பின்பற்ற இயலாமல் போயிற்று!

மதிப்பிற்குரியீர், 'தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு' குறித்த அறிக்கை, அழைப்பு ஆகியவற்றைக் கண்டேன. தங்கள் முயற்சி வெல்லட்டும். தமிழினத்துக்கு விடிவு காலம் வரவேண்டும். அதற்காகப் பலர் உழைக்கிறார்கள். தங்கள் உழைப்பும் அதில் உள்ளது. எனவே தங்களாலோ வேறு யாராவது ஒருவராலோ - தமிழினம் உயர்வு பெற வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில் இன்றும் என்றும் என் உணர்வு மாறாமல் இயங்கிக் கொண்டிருக்கிறேன்; எப்படிச் செயற்படுகிறேன் என்பதை விளக்க வேண்டியதில்லை. எனினும் தங்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டு எதையும் தெரிவிக்க வேண்டும் எனும் எண்ணம் வரவில்லை. மாணவனாக இருந்த காலத்தில் ஓடி ஓடி உழைத்தேன்; என் உழைப்பு சுரண்டப்பட்டது.

துணைப் பேராசிரியராக இருந்த போது உ. த. க. கிளைகளை அமைத்தும் மாநாட்டைச் சிறப்புற நடத்தியும் இயக்க வளர்ச்சிக்கு ஏற்றன செய்தேன். ஆனால் அதன்பின் நான் மேலே வந்து விடாமல் மிக்க கவனமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

தளர்ந்து போன உ. த. க. வை உயிர்ப்பிக்க நெய்வேலியில் எடுக்கப்பட்ட முயற்சியை இரண்டொரு நாளிலேயே முறியடித்துப் பெருமை தேடிக் கொண்டார்கள் இப்படிப்பட்ட பல சூழ்நிலைகளால்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம் பார்க்க)

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு நன்கொடையாளர் பட்டியல்

	முன் மொத்தம்:	4569-50
	திருவாளர்கள்	20-00
59.	மு ஆறுமுகம், சாத்தனூர்	
	மயிலாடுதுறை இரா. நெடுமாறன்	
	திரட்டி இளமுருகன் வழி வந்த வரவு:	100-00
60.	க. தமிழ்வேந்தன்,	100 00
61.	இரா. நெடுமாறன்,	100-00
62.	குன்றன்,	100-00
63.	அரங்க திருவாணன்	
64.	ஆண்டகை (சோழன்) (புருடோத்தமன்)	120-00
65.	புருடோத்தமன் (மருத்துவத்துறை)	20-00
66.	வெற்றியழகன்	60-00
		25-00
67.	புலவர் அதியமான், தாழையூற்று,	
	திருப்பூர் தமிழப்பன் வழி வந்த வரவு:	100-00
68.	க. தமிழப்பா, திருப்பூர்	100-00
69.	ப. துரையரசன்,	100-00
70.	க. வெள்ளிமலை,	100-00
71.	இரா வரதராசன்,	100-00
72.	தமிழன்	
	வேலூர் தமிழ்ச்சேரன் வழி வந்த வரவு,	10-00
73.	சோ. சு. யுவராசன், அரக்கோணம்	10 00
74.	அ. கிருட்டிணன், சோளிங்கபுரம்	10-00
75.	ஆ. சு. நாகராசன், வங்கனூர்	5-00
76.	ந. இராமன், தக்கோலம்	100-00
77.	மா. செ. தமிழ்மணி நெமலி	
78.	வேலூர் குமர. தன்னொளியன் வழி வந்த வரவு (பட்டியல் வரவில்லை,)	100-00
		50-00
79.	மணிமுத்து, பழனி	
	பல்லடம் சீனி. செந்தேவன் வழி வரவு	500-00
80.	உ. த மு க. கிளை. பல்லடம்	100-00
81.	கருணமனோகரன், தமிழ்ச் செல்வி,	25-00
82.	கு. மெய்யறிவு திருமேனி,	20-00
83.	மு. செகநாதன்,	10-00
84.	அசோக்குமார்,	5-00
85.	அரங்கநாதன்,	10-00
86.	அர. பாலசுப்பிரமணியன்,	200-00
87.	பாவேந்தர் இராமலிங்கம், ஈரோடு	50-00
88.	பாவலர் இரா. வடிவேலனார் திருப்பூர்	5-00
89.	வந்தவாசி பெ. இராசமாணிக்கனார்	
	அவர் வழி வந்த நன்கொடை:	5-00
90.	தான் போசுக்கோ, வந்தவாசி	20 00
91.	மாசிலாமணி, வந்தவாசி	25-00
92.	ந. பழனிச்சாமி, ஆதிமங்கலம்	50-00
93.	சரிகாலன், வீரமங்கலம்	75-00
94.	திருமாறன், நெய்வேலி	25 00
95.	அ. வெ. பாலகிருட்டிணன், சென்னை-39	110-00
96.	சி. பூ. மணி, வெங்காளூர்	25-00
97.	பொற்செழியன் வெங்காளூர்,	10-00
98.	மருத்துவா மறையரசன், நீடாமங்கலம்,	10-00
99.	ந. இளமுருகன், நீடாமங்கலம்	
	மொத்தத் தொகை	7179-50

(2- ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாம் என் போன்றவர் தங்களைப் போன்றாரை ஏற்கவோ, பின்பற்றவோ இயலாமல் போயிற்று.

இந் நிலையில் தங்கள் செயல்கள், முயற்சிகள் ஆகிய எவற்றுக்கும் குறுக்கே வரக்கூடாது எனும் கோட்பாட்டோடு இயங்கி வருகிறேன். குறுக்கே வருவதில்லை என்பது மட்டுமின்றி நெருங்கி வருவதும் இல்லை என்பதும் இப்போதைய நிலையாகும்.

தங்கள் முயற்சி வெல்க! 'தமிழினம் தங்களால் பெருமை பெறட்டும்! தொலைவில் நின்றே வாழ்த்தும்'.

அன்பன், முனைவர் மு. தமிழ்க்குடிமகன், க. மு., முதல்வர், யாதவர் கல்லூரி, மதுரை-14

(தொடரும்)

உ. த. மு. க.-வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
- சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம் !
- இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல் !
- மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி !
- பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம் !
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை !

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள் :
தென்மொழி ந. முத்துக்குமரன். பல்லடம்-மா. ஆறுமுகம்.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 80 TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்:
திரு. / திருவாட்டி
நூல் அஞ்சல்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.